உ

சிவமயம்.

திருவொற்றியூர்

# தியாகேசர்பதிகம்.

வடிவுடையம்மன்

## உயிர்வருக்கமாலை

இவ்விரண்டும் அடங்கியிருக்கின்றன.

இஃது,

சிறுமணவூர்,

## முனிசாமிமுதலியா

ரவர்களால் இயற்றப்பட்டு,

தமது
சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1905.

10

உ

திருவொற்றியூர்,

# தியாகேசர் பதிகம்.

மண்ணாதிபூதமொடு விண்ணாதி அண்டம்நீ மறைநான்கின்அடிமுடியும்நீ, மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ அனலும்நீ மண்டலமிரண்டேழும்நீ, பெண்ணும்நீ ஆணும்நீ பல்லுயிர்க்குயிரும்நீ பிரிவுநீ ஒருவநீயே, பேதாதிபேதம்நீ பாதாதிகேசம்நீ பெற்றதாய்தந்தைநீயே, பொன்னும்நீ பொருளும்நீ யிருளும்நீ ஒளியும்நீ போதிக்கவந்தகுருநீ, புகழொணாகிரகங்கள் ஒன்பதும்நீ யிந்த புவனங்கள்பெற்றவனும்நீ, எண்ணரியஜீவகோடிகளீன்றவப்பனே என்துறைகளார்க்குரைப்பேன், ஈசனே வடிவம்மை நேசனே யெனையீன்ற வொற்றியூர் தியாகேசனே. 1

மானாட மழுவாட மதியாட புனலாட மங்கைசிவகாமியாட, மாலாட நூலாட மறையாட திரையாட மறைதந்த பிர்மனாட, கோனாடவானுலகு கூட்டமெல்லாமாட குஞ்சரமுகத்தனாட, குண்டலமிரண்டாட தண்டைபுலியுடையாட குழந்தமுருகேசனாட, ஞானசம்பந்தரொடு யிந்திரர் பதினெட்டுமுனி யஷ்டபாலகருமாட, நரைதும்பையறுகாட நந்திவாகனமாட நாட்டியப்பெண்களாட, வினையோட உனைபாட யெனைநாடி யிதுவேளை விருதோடுஆடிவருவாய், ஈசனே வடிவம்மை நேசனேயெனையீன்ற வொற்றியூர் தியாகேசனே. 2

கடலென்றபுவிமீதில் அலையென்றவுருகொண்டு கனவென்றவாழ்வைநம்பி, காற்றென்றமூவாசை மாறுதச்சுழலிலே கட்டுண்டுநித்தநித்தம், உடலென்றகும்பிக்கு உணவென்றயிரைதேடி ஓயாமலிரவுபகலு, முண்டுண்டுறங்குவதைக் கண்டதேயல்லாது ஒருபயனடைந்திலேனைத், தடமென்றமிடிகரையில் பந்துபாசங்களெனுந் தாபரம்பின்னலிட்டுத், தாயென்றுசேயென்று நீயென்றுநானென்று தமியேனையிவ்வண்ணமாய், இடையென்றுகடைநின்றுயேனென்றுகேளா திருப்பதுன்னழகாகுமோ, ஈசனேவடிவம்மை நேசனேயெனையீன்ற வொற்றியூர் தியாகேசனே. 3

பம்புசூனியமல்ல வைப்பல்லமாரணந் தம்பனம்வசியமல்ல, பாதாளவஞ்சனப் பரகாயபிரவேச மதுவல்லஜாலமல்ல, அம்புகுண்டுகள்விலக பொழியுமந்திரமல்ல ஆகாயகுளிகையல்ல, அன்போடுசெய்கின்ற வாதமோடிகளல்ல அரியமோகனமுமல்ல, கும்

பமுனிமச்சமுனி சட்டமுனிபிரம்மரிஷி கொங்கணர்புலிப்பாணி
யுங், கோரக்கர்வள்ளுவர் போகமுனியிவரெலாங் கூறிடும்வைத்ய
மல்ல, எம்மனதுன்னடிவிட்டு நீங்காதுநிலைநிற்க யேதுளவுபுகல
வருவா, யீசனேவடிவம்மை நேசனேயெனையீன்ற வொற்றியூர்தி
யாகேசனே. 4

நொந்துவந்தேனென்று ஆயிரஞ்சொல்லியுஞ் செவியென்ன
மந்தமுண்டோ, நுட்பநெறியறியாத பிள்ளையைப்பெற்றபின் நோ
க்காததந்தையுண்டோ, சந்ததமுந்தஞ்சமென் றடியைப்பிடித்தபி
ன் றளராதநெஞ்சமுண்டோ, தந்திமுகனறுமுக னிருபிள்ளையில்
லையோ தந்தைநீமலடுதானோ, விந்தையுஞ்ஜாலமு முன்னிடமிருக்
குதே வினையொன்றுமறிகிலேனே, வேதமுஞ்சாஸ்திரமு முன்னை
யேபுகழுதே வேடிக்கையிதுவல்லவோ, யிந்தவுலகிரேழு மேனளி
த்தாய்சொல்லு மினியுன்னைவிடுவதில்லை, ஈசனேவடிவம்மை நேச
னேயெனையீன்ற வொற்றியூர்தியாகேசனே. 5

வழிகண்டுவுன்னடியைத் துதியாதபோதிலும் வாஞ்சையில்
லாதபோதும், வாலாயமாய்க்கோயில் சுற்றாதபோதிலும் வஞ்ச
மேசெய்தபோதும், மொழியெகனைமொகனையில் லாமலேபாடி
னும் முழுகாமியேயாகினும், பழியெனக்கல்லவே தாய்தந்தைக்க
ல்லவோ பார்த்தவர்கள்சொல்லார்களோ, பாரறியமனைவிக்கு பா
தியுடலீந்தநீ பாலனைக்கார்க்கொணாதோ, யெழில்பெரியவண்ட
ங்க ளடுக்காயமைத்தநீ யென்குறைகள்தீர்த்தல்பெரிதோ, யீச
னேவடிவம்மை நேசனேயெனையீன்ற வொற்றியூர்தியாகேசனே.

அன்னைதந்தைகளென்னை யீன்றதற்கழுவனோ யறிவிலாதற்க
ழுவனோ, யல்லாமல்நான்முகன் தன்னையேநோவனோ வாசைமூன்
றுக்கழுவனோ, முன்பிறப்பென்னவினை செய்தனென்றழுவனோ மூ
டருறவுக்கழுவனோ, முன்னிலென்வினைவந்து மூளுமென்றழுவ
னோ முத்திவருமென்றுணர்வனோ, தன்னைநொந்தழுவனோ உன்
னைநொந்தழுவனோ தரித்திரதிசைக்கழுவனோ, இன்னமென்னப்பி
றவி வருமோவென்றழுவனோ யெல்லாமுனைக்கவருவா, யீசனே
வடிவம்மை நேசனேயெனையீன்ற வொற்றியூர்தியாகேசனே. 7

காயாமுன்மரமீது பூபிஞ்சருத்தனோ கன்னியர்கள்பழிகொ
ண்டனோ, கடனென்றுபொருள்பறித் தேவயறெரித்தனோ கிளைவ
ழியில்முள்ளிட்டனோ, தாயாருடன்பிறவிக் கென்னவினைசெய்த

ளு தந்தபொருளிலையென்றனே, தானென்றுகெர்வித்து கொலை
ளவுசெய்தனே தபசிகளையேசினேனே, வாயாறப்பொய்சொல்
வி வீண்பொருள்பறித்தனே வானவனைப்பழித்திட்டனே, வடவு
போலேபிறரைச் சேர்க்காதடித்தனே வந்தபின்னென்செய்தனே,
யியாதலோபியென் றேபெயரெடுத்தனே யெல்லாம்பொறுத்தா
ளுவா, யீசனேவடிவம்மை நேசனேயெனையீன்ற வொற்றியூர்தியா
கேசனே. 8

தாயாரிருந்தென்ன தந்தையுமிருந்தென்ன தன்பிறவியுறவு
கோடி, தனமலைகுவித்தென்ன கனபெயரெடுத்தென்ன தாரணி
யையாண்டுமென்ன, சேயர்களிருந்தென்ன குருவாய்த்திரிந்தெ
ன்ன சிஷர்களிருந்துமென்ன, சித்துபலகற்றென்ன நித்தமும்விர
தங்கள் செய்தென்னநதிகளெல்லாம், ஓயாதுமூழ்கினும் என்னப
னெமனேலை ஒன்றைகண்டுத்தடுக்க, உதவுமோயிதுவெலாம்
சந்தையுறவென்றுதா னுன்னிருபதம்பிடித்தேன், யார்மீதுஉன்
மன மிருந்தாலுமுன்கடைக் கண்பார்வையதுபோதுமே, ஈசனே
வடிவம்மை நேசனேயெனையீன்ற வொற்றியூர்தியாகேசனே. 9

இன்னமுஞ்சொல்லவோ யுன்மனங்கல்லோ யிரும்போபெரு
ம்பாரையோ, யிருசெவியுமந்தமோ கேளாதுஅந்தமோ யிதுவுன
க்கழகுதானே, யென்னன்னைமோகமோ யிதுவென்னசாபமோ
யிதுவுமுன்செய்கைதானே, யிருபிள்ளைதாபமோ யார்மீதுகோப
மோ வானாலும்நான்விடுவனே, உன்னைவிட்டெங்குசென் றாலும்
விழலாவனா னுனையடுத்துங்கெடுவனே, ஓகோவிதின்குற்ற மென்
குற்றமொன்றுமிலை யுற்றுபார்பெற்றவையா, என்குற்றமாயினும்
வுன்குற்றமாயினு மினியருளளிக்கநினைவாய், ஈசனேவடிவம்மை
நேசனேயெனையீன்ற வொற்றியூர்தியாகேசனே. 10

சனிராகுகேதுபுதன் சுக்கிரன்செவ்வாய்குரு சந்திரன்சூரிய
னிவரை, சற்றெனக்குள்ளாக்கி ராசிபனிரெண்டையுஞ் சமமாய்நி
ருத்தியுடனே, பனியொத்தநட்சத் திரங்களிருபத்தேழும் பக்குவ
ப்படுத்திபின்னால், பகர்கின்றகரணங்கள் பதினொன்றையும்வெட்
டிப் பல்லையுமதட்டியென்முன், கனிபோலவேபேசி கெடுநினைநி
னைக்கின்ற கசடர்களையுங்கசக்கி, கர்த்தனின்தொண்டராம்தொ
ண்டர்க்குத்தொண்டரின் தொண்டர்கள்தொழும்பனாக்கி, இனிய
வளமருவுசிறு மணவைமுனிசாமியெனை யாள்வதினியுன்கடன்கா
ண், யீசனேவடிவம்மை நேசனேயெனையீன்ற வொற்றியூர்தியா
கேசனே. 11

தியாகேசர் பதிகம் முற்றிற்று.

உ

## திருவொற்றியூர்

## வடிவுடையம்மன்

# உயிர்வருக்கமாலை.

அஞ்செழுத்தானநீ ஓமெழுத்துருவமாய் அரனோடிருந்தவளும்நீ, ஆறுசாஸ்திரம் நாலுவேதக்கலைக்கியானம் அன்பத்தோரட்சரமுநீ, கஞ்சமலர்மாதுநீ வெஞ்சமரில்வாணனைக் கண்டதுண்டம்செய்தவளும்நீ, காரணிக்கலையேறு வீரமாங்காளிநீ கைலாசவடபாலிநீ, பஞ்சகோணத்திருந் தரம்வளர்ப்பவளும்நீ பாவங்கள்தீர்ப்பவளும்நீ, பாவாணர்பிணிதீர உதவிசெய்மகம்மாயி பகவதிகௌமாரிநீ, வஞ்சகத்திருடர்களை தஞ்சிடவறுத்ததிரு மாலின்சகோதரியும்நீ, வடிவுடையசுந்தரி வொற்றியூர்மேவிவளர் வடிவாம்பிகைக்கௌரியே. (1)

ஆதியாய்அந்தமாய் சோதியாய்வெளியுமாய் ஆருறுதத்துவமுமாய், அகிலமாய் அண்டமாய் சப்தசாகரமுமாய் அணுவாகிமகமேருவாய், நீதியாய்நெறியுமாய் நிலையுமாய்கலையுமாய் நினைவுமாய் கனவுமாகி, நேசமாய்ப்பாசமாய் வுணர்வற்றவடுமைக்குநெஞ்சுக்குமொருதெய்வமாய், வேதியாதேயிருந் தடிமைபிணிதீரெனப்பெற்றவளுநீயாகுமே, பிஞ்சுமதிமஞ்சணி சடைச்சியேசிவனோடு பேசிநடமாடுகின்ற, வாதியேமுக்கண்ணி யபிராமிசிவகாமி வல்லிதிரிசூலிநீலி, வடிவுடையசுந்தரி வொற்றியூர்மேவிவளர் வடிவாம்பிகைக்கௌரியே. (2)

இரவலர்க்கீயாத வறிவிலாமூடரை யிதங்காதகல்நெஞ்சரை, யெவ்வுயிருந்தன்னைபோல் நினையாதகசடரை ஈனங்கள்செய்பவர்களை, பரகதியைநினையாத துற்சனர்கள் முன்சென்று பாடாமலுன்புகழையே, பத்தியாய்நித்தமும் துதிக்கவேயருள்தரும் பரமகலியாணிநீயே, கரமுருகசுந்தரி ராவணன்முடிகொய்த கண்ணன்சகோதரியுநீ, கங்காளிமகிடசங் காரிநீஓங்காரி காரணிபரிபூரணீ, வரமருள்புரந்தரி நிரந்தரிவல்லியாய் வடிவாகநின்றவுமையே, வடிவுடையசுந்தரி வொற்றியூர்மேவிவளர் வடிவாம்பிகைக்கௌரியே.

ஈவதுவிலக்காமல் நோய்பிணிகள்வாராம லெனைமறலியணு காமலே, யிருகமலபாதாரவிந்தமேதந்தென்னை யெப்போதும்நீயா ளுவாய், தாயீன்றபிள்ளையா னூறுபிழைசெய்யினும் தாயலாதா ர் பொறுப்பார், தஞ்சமென்றஞ்சமென்றுலெனக்காரொருவர் தாரணியில்வேறுமுண்டோ, ஓயாதபொருள்தேடி வைக்கிலோர்பிள்ளைணு நுண்டுகலைமூத்தமகளோ, டுறவாடிவாழலாம் தப்பினால்மூவரும் உடனேகெடுக்கநினைவார், வாயாரவெண்ணையை யுண்டமால்தங்கையே வந்தடுமைகார்மங்கையே, வடிவுடையசுந்தரிவொற்றியூர்மேவிவளர் வடிவாம்பிகைக்கௌரியே. (4)

உற்றவர்கள்பெற்றவர்கள் உறவென்னசுற்றமும் வொருகோடிபேரிருந்தும், ஒருகோடிதனமல்ல யெழுகோடிபொன்னிருந் துதவுமோமறலிவருநாள், எத்தேசகாலமும்நின்பாததெரிசனையிடைவிடாதேநினைந்தால், ஏமனோபிணிகளோ கிரகதோஷங்களோ எண்டிசைபறந்தோடுமே, பித்தனொடுஅண்டங்கள் கிடுகிடெனநடனமொடு பேச்சியாய்நின்றவடிவே, பேதாதிபேதமாய் பல்லுயிர் படைத்திட்ட பிரம்மனுக்கதிகாரியே, வற்றாதசெல்வமுங் கல்வியுஞ்ஞானமும் வந்திடயெனக்கருளுவாய், வடிவுடையசுந்தரி வொற்றியூர்மேவிவளர் வடிவாம்பிகைக்கௌரியே. (5)

ஊனுடம்புக்குளே வாசலொன்பதுவிட்டு உபாயதந்திரமாகவே, உள்ளைந்துபூதமும் ஆறுஆதாரமும்ஓங்காரஸ்ரீபீடமும், பானுவும்திங்களும் சுழிவட்டமுனைகளும் பங்கயத்தயனுமாலும், பரமனும்சத்தியும் வெளியொளியுமாகப் படைத்தவளுநீயாகுமே, தேனூறுகனிவாய் திறந்தஞ்செழுத்தைத் தெளிவாகநீயெனக்கு சித்தம்வைத்தென்பேரில் பேரின்பவாழ்க்கையை தெறிந்திடயெனக்கருளுவாய், வானுலவுதிங்களணி செஞ்சடிலனோடுநட மாடிவரும்ரூபமயிலே, வடிவுடையசுந்தரி வொற்றியூர்மேவிவளர் வடிவாம்பிகைக்கௌரியே. (6)

எட்டுகிரிமீதினில் பேழுலகம்வைத்துமகம் மேருவைநிறுத்தியதன்மேல், யியலானபூமிக்கு ளட்டசாகரமுமர் மிலக்கத்தபல்லுயிர்களும், தட்டுவரைவைத்ததும் ஜாதிவிதமானதும் சமயமாறானவிதமும், தாரணியளந்தமால் நான்முகனறுமுகன் தந்திமுகனுனவிதமும், மட்டுலவுலட்சுமி பார்வதிசரஸ்வதி மாகாளியானவிதமும், வாழ்த்தவேமுடியாது நின்மகிமையானதே வளர்சக்தி சிவ

மிரண்டே, வட்டத்திலறுகோணமூர்த்தியே யிமயகிரிமட்ந்தைமெ
னேயாளவந்த, வடிவுடையசுந்தரி வொற்றியூர்மேவிவளர் வடிவா
ம்பிகைக்கௌரியே. (7)

ஏற்பதுஇகட்சியாம் யில்லறம்னல்லதாம் யீவதேபெருமை
யெனவே, யிரவலற்கன்னமுஞ் சொர்னங்கொடுக்கவே ஈஸ்வரிய
ருள்புரிகுவாய், காற்பதேவிரதமாம் உன்பாதமெதரிசனேகண்டுதொ
ழஅறியாதவன், கல்நெஞ்சன்மூஷிகன் சிவபூசையறியாத கஷ்ட
துஷ்டக்கபடஞன், நாற்பத்துமுக்கோண சத்தியைபூசிக்க நாவி
ஞல்துதியாதவன், நானுனக்கடிமையாய் நீயென்னேயாட்கொண்
ட நளினத்தையென்சொல்குவேன், சார்பாகஎனேமறலி யணுகா
மல்ரக்ஷித்துன் மலரடிபதஞ்சேரவே, வடிவுடையசுந்தரி வொற்றி
யூர்மேவிவளர் வடிவாம்பிகைக்கௌரியே. (8)

ஐயாறுமூவேழு அக்ஷரத்துள்ளாகி ஆதியாய்சுழிமுனேயுமா
ய், அனவரதகண்டமாய் பிண்டமாய்என்ஞன்கு அறம்வளர்த்தி
டுதாயுமாய், கையைந்துநாலுவாய் மும்மதமிரண்டுசெவி கரிமு
கவஞெருகொம்பனே, காங்கயன்பன்னிருகை வேலனேப்பெற்றி
டும் கன்னிபகவதிகுமரிநீ, பைப்ரவணிந்தவன் சடையிலும்கையி
லும் பாகத்தமர்ந்தவளுநீ, பதினுலுலோகமும் நிறைந்தபரிபூரணி
பாதபங்கயமருளுவாய், வையகந்தன்னிலே வருமிடியைதீர்த்தும
வாழ்வளித்திடுமன்னேநீ, வடிவுடையசுந்தரி வொற்றியூர்மேவிவள
ர் வடிவாம்பிகைக்கௌரியே. (9)

ஒன்ருகிரெண்டாகி ஒன்றிரண்டொன்ருகி வுண்மைகுருஞா
னவொளிவாய், வுணர்வாலேயறிவாகி முத்திக்குவித்தாகி உண்ணு
க்குள்நீயுமாகி, நன்ருகிநீயெனக் கன்னேயாய்குருவுமாய் நானுனக்
கடிமையானேன், நரகத்தில்வீழாமல் வுன்கருணேமூழ்கியே நமனே
வெல்லக்கருணேசெய், கன்றுனேதேடிவரும் வேளேகண்டேயதன்
கற்ருயிரங்குவதுபோல், காசினியில்உன்னேயல் லாலெனக்காரொ
ருவர் கண்டிலேன்கண்டதுணேயே, கால்தூக்கிநடனமிடும் தியாக
ரிடபாகத்தில் த்ங்கினமால்தங்கையே, வடிவுடையசுந்தரி வொற்
றியூர்மேவிவளர் வடிவாம்பிகைக்கௌரியே. (10)

ஓதவறியேனுனேப் பாடவறியேன்ஒருவர் உத்தரம்பேசவறி
யேன், உரைக்கின்றமுந்நூல்கள் நூற்பயன்அறிகிலேன் ஓம்நமசி
வாயமறியேன், நீதமறியேன்சிவ பூசையறியேன்குருவின் பிணேய

வணங்கவறியேன், நெஞ்சினில்நியானிக்க மந்திரமறியேன்பல நேமநிஷ்டைகளுமறியேன், வேதமறியேன்ஆறு சாஸ்திரமறியேன்உனை வேண்டஅறியாதவனை நீ, மெய்யாகவேதடுத் தடிமைகொண்டாய்உனதுதிருகமலபாதமருள்வாய், மாதமேபத்தும் சுமந்து பெற்றுயென்னை வளர்ப்பதுஉனக்கருமையோ, வடிவுடையசுந்தரிவொற்றியூர்மேவிவளர் வடிவாம்பிகைக்கௌரியே. (11)

ஔவியம்பேசுதல் ஆக்கத்திற்கழகென அறியாதநெஞ்சர்முன்போய், அருமையும்பெருமையும் சொன்னதாலென்கவலை ஆறுவதாளிதாகுமோ, யெவ்வுயிரையும்படைத் தரம்வளர்ப்பவளுக்கு யெளியனொருவிண்ணப்பமே, யேழையினிபாரின்மேல் பிறவாமல்ஒருமந்த்ரம் யீஸ்வரியருள்புரிகுவாய், நவ்வுமவ்வுஞ்சவ்வு வவ்வுமவ்வுந்தினம் நாவிலேநிற்கவருள்வாய், நாலேந்துகிரகமும் ஒத்திருக்கும்படி நடத்தியேயென்னையாளுவாய், வவ்விலேசுழிவட்ட முனையிலேஆதார வஸ்துவாய்நின்றபொருள்நீ, வடிவுடையசுந்தரி வொற்றியூர்மேவிவளர் வடிவாம்பிகைக்கௌரியே. (12)

அஃகனெடுநடனமிடு பொற்பதத்திடுசதங் கைக்குவிரல்காலாழியும், அன்னநடையொத்ததிரு பாதபாடகமுடன் அணிபெருந்தண்டைகொலுசும், திக்குவொளிவீசுசெங் கைக்கடகமோதிரஞ் செம்பொன்ரவிக்கையழகும், செங்கதிர்களைந்தும் சரப்பளிபதக்கமும் சேறுமங்களைநாணுடன், பக்கமதிலிருகுழை தொடுத்த மூக்குத்தியும் பவளவாய்முகத்தினழகும், பங்கயமுகத்திடைச் செந்தூரபிறைநுதற் பார்வையுங்கூந்தல்முடிமேல், வைக்குமிரு திருவெண்ணீ ரணியெழுந்தருளீசன் மனதுக்குள்நீயிருப்பாய், வடிவுடையசுந்தரி வொற்றியூர்மேவிவளர் வடிவாம்பிகைக்கௌரியே.

வடிவுடையம்மன் உயிர்வருக்கமாலை

முற்றிற்று.